தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நிலக்கடலைவிலைசீராக இருக்கும்

உலகளவில் நிலக்கடலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில், போல்டு அல்லது இரன்னர், ஜாவாஅல்லது ஸ்பானிஷ் மற்றும் ரெட் நட்டால் போன்ற பலவகை இரகங்கள் பயிரிடப்படுகின்றன. நிலக்கடலை இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்துப்பயிராகும். நாட்டின் தாவர எண்ணெய் பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் பாலமாகவும் நிலக்கடலை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் ஆண்டு முழுவதும் நிலக்கடலை இரு பயிர் சுழற்சி முறையால் மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இந்தியாவில், நிலக்கடலை பெரும்பாலும் மானவாரியாக பயிரிடப்படுகிறது.

நிலக்கடலை 2014-15ஆம் ஆண்டில் 45.68 இலட்சம் எக்டரில் 48.45 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை 12 சதவீதம் பரப்பளவிலும், 25 சதவீதம் உற்பத்தியிலும் முந்தைய ஆண்டைவிட குறைவாக உள்ளது. குஜராத், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், ஒடிசா மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

விவசாயம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் படி, 2014-15ல் ரூ.4,675.35 கோடி மதிப்புள்ள 0.7 மில்லியன் டன்கள் நிலக்கடலையை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. வியட்நாம், இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகியவை முக்கிய ஏற்றுமதி நாடுகளாகும். இந்தியா, 2014-15ஆம் ஆண்டில் 14.4 மில்லியன் டன்கள் சமையல் எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது. இதுவும் நிலக்கடலை எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

வேளாண் அமைச்சக ஆய்வின் படி, 2014-15ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 2.89 இலட்சம் எக்டரில் 9.31 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் நிலக்கடலை அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரும்பாலான மாவட்டங்களில் நிலக்கடலை ஜூலை–ஆகஸ்டு (ஆடிப்பட்டம்) மற்றும் ஜனவரி–பிப்ரவரி (தைப்பட்டம்) யில் விதைக்கப்படுகிறது.

2016ல் தைப்பட்ட நிலக்கடலை நடவு முடிவுகளை எடுக்க உதவியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ளவேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 13வருடங்களாக நிலவிய நிலக்கடலை விலைகளைஆய்வு செய்தது.

பொருளாதார ஆய்வு மற்றும் சந்தை ஆய்வு முடிவுகளின் படி, மார்ச் - ஏப்ரல் 2016ஆம் ஆண்டில் நிலக்கடலை காய் விலை திருப்பூர் மாவட்ட சேவூர் சந்தையில் கிலோவிற்கு ரூ.40-42ஆகவும், திண்டிவனம் சந்தையில் கிலோவிற்கு ரூ.45-47வரை இருக்குமென்றும் கணிக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் காய்கள் நல்லமண் வளம் காரணமாக தரமாக இருப்பதால், இக்கூடுதல் விலை கிடைத்து வருகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்